2023 ஏப்ரல் 18]

180—

தொழிற்பயிற்சி நிலையம்

***13604—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில், புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கழகப் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் எல்லை கிராமங்களிலிருந்து செங்கல்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையம் சுமார் 50 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்கள் ஆவர். இவர்களது பிள்ளைகள் மேல்படிப்பினைத் தொடர்வதற்கு போதுமான அளவில் பொருளாதார வசதி இல்லை. அரசு கல்லூரி, Polytechnic *கல்லூரி போன்ற எந்த ஓர் அரசு உயர் கல்வி நிறுவனமும் மதுராந்தகம் தொகுதியில் இல்லை. இதனால் மாணவர்கள் தங்கள் படிப்பைத்*

தொடர இயலாமல் கூலி வேலைக்குச் செல்லும் சூழ்நிலை உள்ளது. எனது தொகுதி அருகே அமைந்துள்ள செய்யூர் வருவாய் வட்டம், 146 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இங்குள்ள மாணவர்களுக்கும் இதே நிலைதான் உள்ளது. எனவே, மதுராந்தகம் சுற்று வட்டார கிராமப்புறங்களில் வாழும் ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும்வகையில், மதுராந்தகம் தொகுதியில் வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில், இரண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 8 உள்ளன. இவற்றில் 1,500 மாணவ இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் 974 மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 526 மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் காலியாக உள்ளன. குறிப்பாக, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு தனியார் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உள்ளது. அதற்கென 128 மாணவ இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 17 மாணவர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர். மேலும், 111 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, இத்தகைய சூழ்நிலையில், மதுராந்தகத்தில் புதிதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையத்தை இனிவரும் காலங்களிலாவது அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மதுராந்தகம் வட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின்மூலம் போட்டித்

2023 ஏப்ரல் 18]
தேர்வுக்கான நிரந்தரப் பயிற்சி மையம் மற்றும் தன்னார்வ பயிலும் வட்டம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் புதிதாக 12 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டன. 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 100 விழுக்காடு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மீதமுள்ள 49 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 94 சதவிகித மாணவர்கள் சேர்ந்துள்ளனர். அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள் 76 சதவிகிதம்* campus selection-*மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் நெறி வழிகாட்டும் மையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று-- புதிதாக* Staff Selection Commission, Banking Recruitment, Railway Recruitment *போன்ற ஒன்றிய அரசுப் பணிகளில் சேருபவர்களுக்கான பயிற்சி அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுவரையில், 98 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, 1,44,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிய அரசு, மாண்புமிகு தளபதி அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]